## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி – விடுதிகள் – புதிதாக தோற்றுவிக்கப்பட்ட தென்காசி மாவட்டம், சங்கரன் கோவிலில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர் விடுதி என இரு விடுதிகள் தோற்றுவிக்க நிர்வாக ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை

அரசாணை(நிலை) எண்.123

நாள்.11.12.2020
சார்வரி, காத்திகை மாதம் 26–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2051.
படிக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித எண்.த1/7815/2020,
நாள்: 19.04.2020.

-----

**ஆணை:–**

மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்கள் 2020–2021ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கூட்டத் தொடரில் மானிய கோரிக்கை மீதான விவாதத்தின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

> "புதிதாக துவக்கப்பட்ட தென்காசி மாவட்டம், சங்கரன் கோவிலில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ/மாணவியருக்காக கல்லூரி மாணவர் விடுதி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதி என இரு விடுதிகள் 1.46 கோடி மதிப்பீட்டில் தோற்றுவிக்கப்படும்."

2. மேற்காணும் அறிவிப்பின் அடிப்படையில், மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதிதிராவிடர் நல ஆணையர், தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் இயங்கி வரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த மாணாக்கர்கள் வெளியூரில் இருந்து வந்து படித்துவிட்டு திரும்பவும் வெளியூருக்கு சென்று வருவதால், கல்வியில் கவனம் செலுத்த முடியாத நிலை உள்ளதால், இக்குறையினை நீக்கும் பொருட்டு முதற்கட்டமாக தலா 50 மாணாக்கர்கள் கொண்ட ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகளை தோற்றுவிக்க தொடரும் செலவினமாக ரூ.53,95,736/– மற்றும் தொடரா செலவினமாக ரூ.9,45,000/– ஆக மொத்தம் ரூ.63,40,736/–னை நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

(த.பி.பா)

3. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, தென்காசி மாவட்டம், சங்கரன் கோவிலில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆதிதிராவிடர் மாணவர் விடுதி மற்றும் மாணவியர் விடுதி என இரு விடுதிகளை ரூ.1,46,00,000/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தாறு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் துவங்க தற்போது நிர்வாக ஒப்புதல் வழங்கலாமென முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

4. மேலும், இவ்விரு விடுதிகளுக்கு ரூ.36,400–1,15,700 என்ற சம்பள விகிதத்தில் 1 பட்டதாரி போதக காப்பாளர் பணியிடம், ரூ.15,700–50,000 என்ற சம்பள விகிதத்தில் 1 காவலர் பணியிடம், ரூ.15,700–50,000 என்ற சம்பள விகிதத்தில் 2 சமையலர் பணியிடங்கள், ரூ.3000 தொகுப்பூதியத்தில் 1 துப்புரவு பணியாளர் பணியிடம் ஏற்படுத்தியும் அரசு ஆணையிடுகிறது.

5. இவ்விடுதிகளுக்கான இடம் தேர்வு செய்த பின், நிதி ஒப்பளிப்பிற்கான கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.45601/நிதித்(ஆதி(ம)பந)துறை/2020, நாள் 08.12.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமை செயலாளர்.

பெறுநர்:–
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–600 005.
மாவட்ட ஆட்சியர், தென்காசி மாவட்டம்.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
தென்காசி மாவட்டம்.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை–600 008.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை–600 009.
மாநில கணக்காயர், சென்னை–600 018/35.

**நகல்:–**
மாண்மிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
அமைச்சர் (ஆதி(ம)பந) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை–600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலர்
அவர்களின் தனிச்செயலர், சென்னை–600 009.
நிதித்(ஆதி(ம)பந)துறை, சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.2/ஆதிந5)துறை,
சென்னை– 600 009.
சிறப்பு திட்டம் செயலாக்கத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

11/12/2020
பிரிவு அலுவலர்.
11/12/2020